
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

கற்றனைத்தூறும் அறிவு

மார்ச் - 2019 விளம்பி ஆண்டு பங்குனி மாதம்

இதழ் – 4 துளிர் – 6





# துளிர்

மாணவர்களுக்கான மாத இதழ்



## உள்ளே....

- வேதாளம் சொல்லும் கதை
- புதிரோடு விளையாடு
- காலத்தை வென்றவர்
- மாணவர் பக்கம்

## கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;
கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00 PM - 7:00PM CST

www.coppelltamil.com

connect@coppelltamil.com



# வேதாளம் சொல்லும் கதை

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் முருங்கை மரத்தில்ஏறி, அதில் தொங்கிய உடலைக் கீழே வீழ்த்தினான். அதைத் தூக்கிக் கொண்டு மயானத்தை நோக்கிச் செல்லுகையில் அதனுள்ளிருந்த வேதாளம், “மன்னா! நீ உன்னதமான ஒரு லட்சியத்தை இலக்காகக் கொண்டுள்ளாய் என்று தோன்றுகிறது. ஆனால் சிலர் அற்ப விஷயங்களுக்காகத் தங்கள் சக்தியை வீணாக்குகின்றனர். அத்தகைய ரவிவர்மன் என்ற மன்னனுடைய கதையைக் கூறுகிறேன், கேள்!” என்று கதை சொல்லலாயிற்று.

ரவிவர்மன் விதர்ப ராஜ்யத்தை ஆண்டு வந்த மன்னன்! விநோதமான, அதிசயமான விஷயங்களில் அவனுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. ஆட்சிப் பொறுப்பை மந்திரிகளிடமும், அதிகாரிகளிடமும் ஒப்படைத்து விட்டு, தன் நேரத்தைப் புதிய விஷயங்களைப் பற்றி அறிவதில் ஆர்வம் காட்டி வந்தான். அவ்வப்போது மந்திரிகளை அழைத்து ராஜ்யத்தைப் பற்றி விசாரிப்பதுண்டு. அவர்கள் நிர்வாகம் சரியாக நடப்பதாகக் கூறுவதைக் கேட்டு திருப்தி அடைந்து வந்தான்.

ஒரு சமயம் , மன்னனுக்கு தன் ராஜ்யத்தில் நடக்கும் விநோதமான விஷயங்களைப் பற்றி அறிய ஆவல் உண்டாயிற்று. உடனே தனது முதன் மந்திரியை அழைத்து அடுத்த பௌர்ணமியன்று, சபைக்கு வந்து நாட்டின் பல வினோதமான விஷயங்களைப் பற்றிக் கூறுபவர்களுக்குப் பரிசு அளிக்கப் போவதாக அறிவித்தான்.

அவ்வாறே பௌர்ணமி தினத்தன்று சபையில் பெருங்கூட்டம் கூடியது. முதலில் கோபி என்ற விவசாயி முன் வந்தான். மன்னனை வணங்கிவிட்டு, அவன் தான் கொண்டு வந்த பெட்டியைக் காட்டினான். பின்னர், “மகாராஜா! ஒருநாள் நான் என் வயலை உழுது கொண்டிருக்கையில், எனக்கு இது கிடைத்தது.அதைத் திறந்துப் பார்த்ததில் உள்ளே ஒரு கருங்கல் இருந்தது. பெட்டியைத் திறந்தவுடன், திடீரென பகல் பொழுது மறைந்து இருள் சூழ்ந்தது. பெட்டியை மூடியவுடன், மீண்டும் இருள் நீங்கிப் பகலாகியது. பெட்டிக்குள்ளிருந்த கல்லில்தான் ஏதோ மாயசக்தி உள்ளது என்று எனக்குத் தோன்றியது. இது பகலை இரவாக்கிவிடும் தன்மைஉடையது!” என்று சொல்லிவிட்டுப் பெட்டியை மன்னரிடம் தந்தான். உடனே ரவிவர்மன் பெட்டியைத் திறந்துப் பார்க்க அவ்வாறே நடந்தது. “ஆகா! இந்தக் கருங்கல் ஒரு நம்ப முடியாத உண்மை” என்று பாராட்டி விட்டு கோபிக்கு ஆயிரம் பொற்காசுகள் தந்தார்.

மன்னன் ரவிவர்மனிடம் வந்த மேலும் பல விநோதங்களை, அடுத்த இதழில் பார்க்கலாம்…

# நிகழ்வறிவோம்



அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் நடைபெற்ற ”தி வேர்ல்ட்’ஸ் பெஸ்ட்” போட்டியில் பட்டம் மற்றும் ரூ.7 கோடி பரிசை வென்றிருக்கிறார் சென்னை சிறுவன் லிடியன் நாதஸ்வரம்.

ஏ. ஆர். ரகுமானின் கே.எம். இசைப்பள்ளியில் பயின்று வரும் 13வயது மாணவன் லிடியன் நாதஸ்வரம் வெற்றி பெற்றதற்கு ஏ.ஆர். ரகுமான் பாராட்டுக்களைத் தெரிவித்தார்

கண்களைக் கட்டிக் கொண்டு மிக வேகமாக பியானோ இசைக்கருவியை வாசிப்பதில் அசாத்திய திறமை உடையவர் லிடியன் நாதஸ்வரம்.

இரண்டு பியானோக்களில் இரண்டு விதமான பாடல்களை வாசித்து இறுதிப்போட்டியில் நடுவர்களை பிரமிக்க வைத்து பட்டத்தை வென்றார். இது மிகவும் கடினமானதும் கூட, ஏனெனில் இரண்டு விதமான காலப் பிரமாணமுடைய பாடல்களைத் துல்லியமாக இரு கைகளாலும் ஒரே நேரத்தில் வாசிப்பது கடினமென இசை வல்லுநர்களே கூறியுள்ளனர்.

லிடியன் நாதஸ்வரம் இசையில் இன்னும் பல உயரங்களைத் தொட வாழ்த்துகிறது கோப்பல் தமிழ்க் கல்வி மையம்.



**கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு**



**நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை , அதே விலையில் https://smile.amazon.com இணையதளம் மூலம் பெறுங்கள். “DFW Tamil Foundation” என்று *smile.amazon.com* இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ்ப் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.**

amazon.com Smile
You shop. Amazon gives.

# காலத்தை வென்றவர்



1833 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் நாள் ஸ்வீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் ஆல்ப்ரெட் நோபல் பிறந்தார்.355 கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை பெற்றிருந்தாலும் ,போரின் போது பயன்படுத்தக்கூடிய வெடிமருந்தான டைனமைட் இவரின் மிகப்பெரியக் கண்டுபிடிப்பாக கருதப்பட்டது.1888 ஆம் ஆண்டு நோபலின் சகோதரரின் மரணத்தை நோபல் இறந்துவிட்டார் என்று தவறாக வெளியிட்ட ஒரு பிரெஞ்சு நாளிதழ், "மனிதர்களைக் கூண்டோடு அழிக்கும் மருந்தைக் கண்டுபிடித்து செல்வந்தரானவர் மாண்டார்" என்று செய்தி வெளியிட்டது.

மரணத்திற்குப் பின் தாம் இவ்வாறு நினைவு கொள்ளப்படுவதை நோபல் விரும்பவில்லை. எனவே தன் சொத்தில் பெரும்பங்கை, தன் பெயரிலேயே விருதுகள் வழங்கப் பயன்படுத்த வேண்டும் என்று உயில் எழுதி வைத்தார்.அவர் இறந்து பல வருடங்கள் ஆன பின்பும், இன்றும் நோபல் பரிசுகள் இயற்பியல்,வேதியியல்,மருத்துவம் மற்றும் இலக்கியம் எனப் பல துறைகளில் சிறந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

# குறளும் அதன் பொருளும்



விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

**<u>மு.வரதராசனார் (மு.வ) உரை:</u>**


விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று

**<u>சாலமன் பாப்பையா உரை:</u>**

விருந்தினர் வீட்டிற்கு வெளியே இருக்கத் தான் மட்டும் தனித்து உண்பது, சாவைத் தடுக்கும் மருந்தே என்றாலும், விரும்பத் தக்கது அன்று

துளிர்
மாணவர்களுக்கான மாத இதழ்

# புதிரோடு விளையாடு



## மழலை நிலை

புள்ளிகளை வரிசைப்படி இணைத்து, மறைந்திருக்கும் என்னைக் கண்டுபிடியுங்கள்.

## நிலை 3 முதல் நிலை 4 வரை

1 .டை ல் ர ட் வி க

2 .ழ க் வ ம் ப க் ழ க க

3 .த ந் ப நி னை

## நிலை 5 முதல் நிலை 8 வரை

பால்காரரர் ஒருவரிடம் இரண்டு காலி ஜக்குகள் உள்ளன; ஒன்று மூன்று லிட்டரும், மற்றொன்று ஐந்து லிட்டரும் பிடிக்கும்.

பாலை வீணாக்காமல் ஒரு லிட்டர் பாலை எவ்வாறு அளப்பார்?

## விடுகதை

ஒரு சாண் குதிரைக்கு உடம்பெல்லாம் பல். அது என்ன?

சிவப்பு ரோஜா மலர்ந்தால் வெள்ளை மலர்கள் தெரியும். அது என்ன?

## சென்ற இதழ் விடுகதைகளுக்கான விடைகள்

1 . பென்சில்
2 . பூரி

அனைத்து நிலை மாணவர்களும் தங்கள் விடைகளை அனுப்ப
https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புகளை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை newsletter@coppelltamil.com என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.**

# தோழா தோழி



தோழி செல்போனில் வீடியோ பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். என்ன செய்து கொண்டிருக்கிறாய் தோழி, என்றபடியே அங்கு வந்தான் தோழன்.

நான் பஞ்சதந்திர கதைகள் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.நீயும் வா, பார்க்கலாம்

இல்லை தோழி நான் பார்ப்பதை விடப் படிப்பதையே விரும்புகிறேன்.

படிப்பதைக் காட்டிலும் விடியோவாகப் பார்ப்பதால் நமக்கு வேலை மிச்சம் தானே!

அப்படி நினைக்காதே தோழி .ஒரு கதையைப் படிக்கும் போது நமது கற்பனை தூண்டப்படும்.அந்த கதைக்குள் நாம் பயணிப்பதாகத் தோன்றும்.அதாவது, அந்த இடத்தில் நாமும் இருப்பது போன்ற உணர்வைத் தரும்.அது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.புத்தகங்கள் நாம் சென்றிடாத இடங்களுக்கும் கூட்டிச் செல்லும் சக்தி வாய்ந்தவை.



நீ சொல்வதைக் கேட்கும் போதே, புத்தகம் படிக்க வேண்டும் என்னும் ஆவல் எனக்குள் எழுகிறது தோழா.இனி நானும் பார்ப்பதைக் குறைத்துக் கொண்டு, படிப்பதை அதிகரித்துக் கொள்கிறேன்.

- விஷ்வசாந்தி

# மாணவர் பக்கம்




உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றமும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், சிகாகோ தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் 10-ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிகாகோ நகரில் 2019 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 4 முதல் 7 ஆம் நாள் வரை நடைபெற இருக்கின்றது.

குறள் தேனீ, தமிழ்த் தேனீ , குறள் தூதர் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. முன்பதிவு செய்து, பங்கேற்று உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பியுங்கள். மேலும் விவரங்களுக்கு https://fetnaconvention.org/ta/

கோப்பல் தமிழ்க் கல்வி மையத்தின் சார்பாக, தமிழ்த் தேனீ போட்டியில் பங்குபெற https://goo.gl/forms/c15ELmMDpmVGYqwK2